பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 22 வியாழக்கிழமை 07.07.2022 கதிர் 244

**இது ரகசியம் அல்ல!**

தினமும் அரசியல் சர்ச்சைகள், செய்திகளை இப்பத்தியில் வாசித்து உங்களுக்கும் அலுப்புத் தட்டி இருக்கும். இன்று வித்தியாசமான ஒரு தகவல்.

இதற்கும் வழமை போல அவ்வப்போது எனக்குக் கை கொடுக்கும் நடிகர் வடிவேலுதான் ☞ 2

# தமிழருக்கு விடுதலையை பெற்றுத்தரும் சர்வதேசம்!



## நம்பிக்கை இன்னமும் வீண்போகவில்லை; கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கருத்து

தமிழ் மக்கள் சகல உரிமைகளுடனும் சுதந்திரமாக வாழும் நிலை ஏற்பட வேண்டும். அந்த நிலையை ஆட்சியாளர்கள் ஏற்படுத்தாவிடினும் சர்வதேச சமூகம் ஏற்படுத்தியே தீரும். அந்த நம்பிக்கை இன்னமும் வீண்போகவில்லை.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார். ☞ 2

## யாழ் பண்ணையில் முதியவரின் சடலம்



(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜூலை 07

யாழ்ப்பாணம் பண்ணை கடற்கரைப் பகுதியில் முதியவர் ஒருவரின் சடலம் நேற்றையதினம் மீட்கப்பட்டுள்ளது. ☞ 2

## ராஜபக்ஷ குடும்ப ஆட்சியே நாட்டை மீட்கத் தடைக்கல்

### பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் விசனம்



ராஜபக்ஷ குடும்பம் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பது, தற்போதைய துரதிஷ்டமான சூழ்நிலையில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கு மிகப் பெரிய தடையாக உள்ளதாக கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

புதிய பிரதமரின் நியமனம் குறித்து மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அடிபணிந்து, சிறிது காலம் மௌனம் காத்த போதிலும் சமயத் தலைவர் மற்றும் பொறுப்புள்ள பிரஜை என்ற ரீதியில் தற்போதைய ☞ 2

## திருவாவடுதுறை ஆதீனத்துடன் விமானம் சென்னையிலிருந்து நாளை பலாலிக்கு

### 27 மாதங்களின் பின்னர் முதலாவது சர்வதேச சேவை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம். ஜூலை 07

திருவாடுவதுறை ஆதீன இளையகுருமுதல்வர் அடங்கிய முதலாவது விமானம் நாளை சென்னையில் இருந்து பலாலியை வந்தடைகின்றது எனச் சென்னைச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

திருவாவடுதுறை ஆதீன குரு முதல்வர் தம்பிரான் சுவாமிகள் உள்ளிட்டவர்கள் பயணிக்கும் சிறிய விமானம் ஒன்று 27 மாத இடைவெளிக்குப் பின்னர் நாளை பலாலியில் முதலாவது சர்வதேச விமானமாகத் தரை இறங்குகின்றது.

அதில், இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ் நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை உட்பட சில ☞ 2

## நானாட்டான் பிரதேசத்தில் ஆள்களைக் கடிக்கும் கரடி!



மன்னார் மாவட்டத்தில் உள்ள வட்டுப்பித்தான் மடு, நானாட்டான், வங்காலை போன்ற பகுதிகளில் அண்மைய நாள்களாக கரடி ஒன்றின் அட்டகாசம் அதிகரித்துள்ள நிலையில் பலர் கரடிக் கடிக்கு இலக்காகியுள்ளனர்.

அதில் ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்திய சாலையில் ☞ 2

## அவசரமாக எரிபொருள் வாங்குவதற்காக அதிக பணத்தைச் செலுத்துகிறதாம் அரசு

அவசரமாக இறக்குமதி செய்ய வேண்டிய எரிபொருள் கப்பல்களுக்கு அதிக பணம் செலுத்த வேண்டியுள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐ.ஓ.சி. நிறுவனம் எங்களுக்கு வழங்கிய முதல் பெற்றோல் கப்பல் வரும் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் வரும்.

நாட்டிற்குத் தேவையான எரிபொருளை குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றிடம் ☞ 2

## பக்திபூர்வமாக இடம்பெற்ற கேதீஸ்வர கும்பாபிஷேகம்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 07

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான பாடல் பெற்ற திருத்தலமான மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் ☞ 2

## உரக் கப்பலின் வருகை தாமதம்

கொழும்பை நேற்று (புதன் கிழமை) வந்தடையும் என எதிர்பார்க்கப்பட்ட யூரியா உரக் கப்பலின் வருகை மேலும் தாமதமாகும் என கொமர்ல் உர நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடற்காற்றின் ☞ 2

## புடினிடம் கடனுக்கு எரிபொருள் கேட்டார் ஜனாதிபதி கோட்டா!



இலங்கைக்கு எரிபொருளை இறக்குமதி செய்ய ரஷ்யாவிடம் கடன் உதவியைக் கோரினேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ருவிட்டரில் நேற்று (புதன்கிழமை) தாம் வெளியிட்டுள்ள பதிவிலேயே ஜனாதிபதி இவ்வாறு ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
உதவ வருகிறார்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் 2002இல் அவர் நடித்து வெளிவந்த படம் 'ஸ்ரீ'.

வைன் ஷொப் ஓனர் (முதலாளி) தனது கடையை இரவு 10 மணிக்கு மேல் மூடி விட்டு வீட்டுக்குப் போய் பதினொரு மணி அளவில் இளம் மனைவியோடு கட்டிலில் சல்லாபத்தில் இருப்பார். அப்போது தொலைபேசி மணி அடிக்கும். மறுமுனையில் வடிவேலு.

"ஹலோ! பிரபா ஒயின் ஷாப் ஓனரா பேசுவது?" – என்று வடிவேலு கேட்பார்.

"ஆமாம்." – என்று பதில் வரும்.

"கடை எப்ப ஸார் திறப்பீங்க?" என்று பவ்வியமாகாக் கேட்பார் வடிவேல்.

"இப்பதான் கடையை அடைத்து விட்டு வந்தேன்" என்று கடை முதலாளி சொல்லுவார்.

"ஸாரி போர் த டிஸ்டேர்பன்ஸ்" என்று தனக்கே உரிய ஆங்கிலத்தில் பணிவாகப் பதில் கூறி தொலைபேசியை வைப்பார் வடிவேலு.

இவ்வளவுக்கும் மூடி இருக்கும் அந்த வைன் ஷொப்புக்குள் இருந்துதான் இந்தத் தொலைபேசி அழைப்புகளை வடிவேல் எடுப்பார். உள்ளே ஆற அமர இருந்து, குடிவகைகளை வரிசையாக அடுக்கி, தாம் உள்ளே தள்ளி ஒரு கை பார்த்தபடி, போதை ஏற ஏற அவ்வப்போது தொலைபேசி அழைப்பு எடுத்துக் கடை முதலாளிக்குத் தொல்லை கொடுப்பார் வடிவேலு. அழைப்பு முடியும் போது ஒவ்வொரு தடவையும் "ஸாரி போர் த டிஸ்டேர்பன்ஸ்" என்ற அவர் பாணி ஆங்கிலப் பிரவாகம் தவறாது.

கடைசியாகத் தொல்லை தாங்க முடியாமல் சீறுவார் முதலாளி.

அதிகாலை 2 மணி அளவில் கடைசியாக எடுக்கும் தொலைபேசி அழைப்பின் போதுதான், இரவு கடை பூட்டும்போது தான் நைஸாக உள்ளே நுழைந்து, அங்கு கல்லாப் பெட்டியில் இருந்த 48 ஆயிரம் ரூபா பணத்தை ஆட்டையைப் போட்டுவிட்டு, இருக்கின்ற போத்தல்களை ஒரு கை பார்த்துக் கொண்டிருப்பது பற்றிய தக வலைச் சொல்லுவார். பதறி அடித்துக் கொண்டு கடை முதலாளி ஓடி வருவார் – கடையைத் திறக்க.

இது சினிமாப் படம். இதே கதை யாழ்ப்பாணம் நகரில் சினிமாப் படம் பார்க்கப் போன ஒருவருக்கு நேர்ந்திருக்கின்றது. நடந்தது இதுதான்:–

மது அருந்திவிட்டு 'கிக்'கோடு யாழ். நகரில் இயங்கும் தியேட்டர் ஒன்றுக்கு நேற்று முன்தினம் திரைப்படம் பார்க்கச் சென்ற ஒருவர் தியேட்டரிலேயே பல மணி நேரம் சிறை வைக்கப்பட்டார்.

மதுபோதையில் இரவு படம் பார்க்கப் போன அவர் படம் முடியுமுன்பே ஆழ்ந்த உறக்கத்துக்குப் போய் விட்டார். படம் முடிவடைந்து அனைவரும் வெளியேறியதும் திரையரங்கு உரிமையாளரும் பணியாளர்களும் வழமையான பணி முடித்து, திரையரங்கை மூடி விட்டு வீடு சென்று விட்டனர். மதுபோதையில் உறங்கியவர் நேற்று எழுந்து பார்த்தபோது பகல் 10 மணி. எவருமே இன்றி, தியேட்டர் எல்லாப் பக்கத்திலும் மூடிக் கிடந்தது. தனிமையில் சகல வாசல் கதவுகளையும் தேடித் தேடிப் பார்த்தார். எந்தப் பாதையூடாகவும் வெளியே வர முடியவில்லை. மாடிக்கு சென்று அங்கிருந்த ஜன்னல் வழியாக அயலில் உள்ள கடைக்கு வந்து போகின்றவர்களை அவதானித்து சத்தமிட்டுக் குரல் எழுப்பியிருக்கின்றார்.

திரையரங்கின் அருகே ஒரு 'தம்பி தேநீர்கடை' நடாத்துகின்றார். அவரது கடைக்கு வந்தவர்கள் அவதானித்து கடை உரிமையாளருக்குத் தெரியப்படுத்தியதனால் அவர் திரையரங்கு உரிமையாளரின் தொலைபேசி இலக்கத்தைத் தேடிப்பிடித்து தகவல் வழங்கினார். தியேட்டர் உரிமையாளர் வந்து சிக்கியவரைச் சிறை மீட்க நேற்று நண்பகல் 12 மணியாகிவிட்டது.

இதன் பின்னர் அந்தத் தேநீர்கடைக்கு வந்து தேநீர் அருந்தித் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, தனக்கு நடந்தவற்றை கடைகாரத் தம்பியிடம் தெரிவித்து விட்டு வீடு சென்றார் அவர்.

இந்தத் தகவலை எனது செய்தியாளர் பற்றிக்கொண்டார். அந்த விடயங்கள் எனது 'இனி இது இரகசியம் அல்ல' வாசகர்களைச் சென்றடைய வேண்டும் என்பது அவர் விருப்பம். அதனால் அப்படியே ஒப்புவித்து விட்டேன்.

நல்லவேளை "ஹலோ! பிரபா வைன் ஷொப் முதலாளியா பேசுகிறீர்கள்?" என்ற பாணியில் திரையரங்கு முதலாளிக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்துத் தொல்லை கொடுக்கவில்லை சினிமாப் படம் பார்க்கப் போன நம் 'பெரும்குடி' ரசிகர்.

அவர் கையில் தொலைபேசியும் இருக்கவில்லை. தியேட்டரின் நிலையான இணைப்புத் தொலைபேசியும் அவர் கையில் சிக்கவில்லை. தியேட்டர் உரிமையாளரின் தொலைபேசி இலக்கமும் அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. அதனால் நள்ளிரவு வேளைத் தொல்லையில் இருந்து தப்பிக்கொண்டார் உரிமையாளர்...!

– மின்னல் –

---

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
'குளோப் தமிழ்' இணையத்துக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சிதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இந்நிலையில், கூட்டமைப்பைச் சிதைக்கும் நோக்குடன் விமர்சனங்கள் முன்வைக்கப்படலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தீர்மானத்தின்படி கூட்டமைப்பின் தலைவராக நானே தொடர்ந்தும் பதவி வகிக்கின்றேன்.

கூட்டமைப்புக்குள் இருப்பவர்கள் எவரும் தலைவர் பதவியை சவாலுக்குட்படுத்தி கருத்துக்கள் எதனையும் முன்வைக்கவில்லை.

எனது உடல் நிலையில் சிறிய தாக்கம் ஏற்பட்டாலும் நான் இன்னமும் தைரியத்துடன்தான் இருக்கின்றேன்.

தமிழ் மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நான் அவதானித்துக்கொண்டுதான் இருக்கின்றேன். அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வு விடயங்கள் தொடர்பில் உள்நாட்டு, வெளிநாட்டு முக்கியஸ்தர்களுடன் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் பேச்சும் நடத்தி வருகின்றேன் – என்றார்.

---

## யாழ் பண்ணையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அவர் யார் என்பது அடையாளம் காணப்படவில்லை.

கடற்றொழிலாளர்கள் தொழிலுக்காக சென்ற போது சடலமொன்று மிதப்பது இனங்காணப்பட்டு பொலிஸாருக்குத் தகவலளிக்கப்பட்டது. இதனையடுத்து தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

சடலத்தை பார்வையிட்ட யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார், முதியவர் தீவகப்பகுதியைச் சேர்ந்த யாசகம் பெறுபவராக இருக்கலாமென சந்தேகம் வெளியிட்டார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

---

## உரக் கப்பலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தாக்கம் காரணமாக இந்தக் கப்பல் நாளை மறுதினம் 9ஆம் திகதி இரவு கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் என வர்த்தக உர நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஓமானில் உள்ள 'செள ஓமன்' என்ற துறைமுகத்தில் இருந்து கடந்த 03ஆம் திகதி இந்தக் கப்பல் புறப்பட்டதாக விவசாய அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பல் நேற்று இலங்கையை வந்தடையும் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நிலவும் கடும் காற்றின் தாக்கம் காரணமாக யூரியா உரக் கப்பல் 9ஆம் திகதி இரவே இலங்கையை வந்தடையும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்த கப்பலில் 40 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது

---

## ராஜபக்ஷ குடும்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
நிலைமையைக் கருத்தில் கொண்டு தன்னால் அமைதியாக இருக்க முடியாது எனவும் பேராயர் தெரிவித்தார்.

தமது பேராயர் இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் ஆட்சியில் இருப்பதற்கு ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் தார்மீக உரிமை இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, நாட்டில் ஏற்பட்டுள்ள அவல நிலைக்குப் பொறுப்பேற்று பதவிகளை இராஜினாமா செய்து நாட்டின் எதிர் காலத்தை மக்களிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுக்கிறார் எனவும் பேராயர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்பின்னர், மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த இடைக்கால சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கலாம் என்று கூறிய பேராயர், தொழில் நுட்ப மற்றும் புத்திஜீவிகள் குழு மூலம் நிபுணத்துவ ஆலோசனை பெற்று, தற்போதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்றார்.

நாட்டில் நிலைமை சீரடைந்தவுடன் விரைவில் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும், இந்த நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்க அனைத்து எதிர்க் கட்சி அரசியல் தலைவர்களும் முன்வர வேண்டுமெனவும் தாம் கேட்டுக் கொள்கிறார் எனவும் பேராயர் தெரிவித்தார்.

---

## பக்திபூர்வமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நேற்றுக் காலை 9 மணிக்கு திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு சிவசிறி தியாகராஜா கருணானந்த குருக்கள் தலைமையில் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு கடந்த 30 ஆம் திகதி முதல் பூர்வாங்கக் கிரிகைகள் இடம் பெற்றன.

அதனை தொடர்ந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணி வரை எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

அதனையடுத்து சுவாமிகளுக்கான கிரியைகள் இடம்பெற்றமையுடன் யாகப் பூஜைகளும் நடைபெற்றன.

நேற்றுப் புதன்கிழமை காலை 9 மணி அளவில் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற்றது.

இதன் போது குருக்கள் மற்றும் மக்கள் என பல ஆயிரக்கணக்கானவர்கள் கும்பாபிஷேக பெருவிழாவில் கலந்து கொண்டிருந்தனர்.

எனினும் எரிபொருள் தட்டுப்பாட்டால் ஏற்பட்ட போக்குவரத்து நெருக்கடி காரணமாக நேற்றைய மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவில் வெளியிடங்களைச் சேர்ந்த பக்தர்கள் கலந்து கொள்ள முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

## திருவாவடுதுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
முக்கிய பிரமுகர்களும் வரக் கூடும் என ஒரு வட்டாரம் தெரிவித்தது.

பலாலிக்கு நாளை வருவது ஒரு வாடகை ('சாட்டட்') விமானம். அதில் 12 பேர் மட்டுமே பயணிக்க முடியும்.

இதேநேரம் இந்த விமானத்தில் வருகை தரும் திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வர் தம்பிரான் சுவாமிகள் நல்லூர், திருக்கேதீஸ்வரம், கீரிமலை நகுலேஸ்வரம் உள்ளிட்ட ஆலயங்களிற்கும் பயணிக்கவுள்ளார்.

---

## அவசரமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இருந்து இம்மாதம் 13ஆம் திகதிக்குள் கொண்டு வருவதற்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழு நேற்று இரவு எமக்கு அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால் பிரச்சினை என்னவென்றால், அவர்கள் நாங்கள் வழமையாக பெறும் விலையை விட அதிக விலையை முன்வைத்துள்ளனர்.

அந்த நிறுவனத்திற்கு தேவையான முன்பணத்தை இன்று (நேற்று) செலுத்துகிறோம். வரும் 15 ஆம் திகதி கப்பல் எங்கள் நாட்டிற்கு கிடைக்குமென நம்புகிறோம் என அவர் தெரிவித்துள்ளார்.

---

## புடினிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவில் –

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் உரையாடினேன். கடந்த கால சவால்களைச் சமாளிக்க அவரது அரசாங்கம் வழங்கிய அனைத்து ஆதரவிற்கும் நன்றி தெரிவிக்கும் அதேவேளையில், தற்போதைய பொருளாதார சவால்களை தோற்கடிப்பதற்காக இலங்கைக்கு எரிபொருளை இறக்குமதி செய்ய கடன் ஆதரவை கோரினேன்.

சுற்றுலா, வர்த்தகம் மற்றும் கலாசாரம் போன்ற துறைகளில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது நமது இரு நாடுகளும் பகிர்ந்து கொள்ளும் நட்பை வலுப்படுத்துவதில் மிக முக்கியமானது என்பதை நாங்கள் ஒருமனதாக ஒப்புக் கொண்டோம் என பதிவிட்டுள்ளார்.

---

## நானாட்டான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சியாக இந்தக் கரடியின் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று வருகின்ற நிலையில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் எரிபொருள் பிரச்சினை காரணமாக கரடியைப் பிடிக்க முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்து இரவு நேரங்களில் கரடி மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் நுழைவதாகவும் அதிகாலை நேரங்களில் நடமாடும் மக்களை தாக்குவதாகும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் பொது வைத்தியசாலையில் மிருக கடிக்குரிய மருந்து தட்டுப்பாடு நிலவிவருகின்ற நிலையில் தொடர்ச்சியாக இக் கரடி மக்கள் வசிக்கும் பகுதிக்கு சென்று மக்களை தாக்குவது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு மன்னார் பிரதான காலப்பகுதியில் மீன் பிடியில் ஈடுபட்ட மீனவர் ஒருவர் மீதும் கரடி தாக்கிய நிலையில், அந்நபர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி அதிகாலை 3.30 மணியளவில் இந்தக் கரடி நானாட்டான் பிரதேச செயலக பிரதான வீதியில் நடமாடுவதையும், கரடியை கண்ட நாய்கள் ஓடுவதையும் சி.சி.ரி.வி. பதிவுகளில் காணக்கூடியதாக உள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## தவிச்ச முயல் அடிக்காதீர்!

பொருளாதார நெருக்கடியில் தள்ளாடுகின்றது இலங்கை. எரிபொருளுக்கும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களுக்கும் வழியின்றி அல்லாடுகின்றது நாடு.

எரிபொருள் கொள்வனவுக்காக பல தரப்புகளுடனும் அரசு ஊடாட்டம் நடத்துகின்றது.

தன்னுடைய இறைமைப் பிணைமுறி உட்பட்ட கடனுக்கான தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறியமையால் கடனிறுக்க வழியற்ற நாடு என்ற பெயரைச் சம்பாதித்துக் கொண்டாகி விட்டது.

இத்தகைய நாட்டுக்குக் கடன் அடிப்படையிலோ அல்லது பிற்கொடுப்பனவு ரீதியிலோ எரிபொருளை வழங்குவதற்கு தனிப்பட்ட சர்வதேச நிறுவனங்கள் எவையும் தயாரில்லை.

இலங்கைக்கு வேறு ஏதேனும் நாடு பிணை நின்று, கொடுப்பனவுக்கு உறுதி தந்தால், சர்வதேச நிறுவனங்கள் எரிபொருள் விநியோகத்தைச் செய்யும் வாய்ப்புண்டு.

அயல் தேசம் என்ற முறையில் – இலங்கையின் நலனில் சிரத்தை உள்ள நட்பு நாடு என்ற வகையில் – 'அயல்தேசத்துக்கு முன்னுரிமை' என்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வெளியுறவுக் கோட்பாட்டின் அடிப்படையில் – இந்த இக்கட்டு நேரத்தில் எரிபொருள், பசளை மற்றும் அத்தியாவசியப் பொருள்களை இலகு கடன் அடிப்படையில் இலங்கைக்கு வாரி வழங்கிய இந்தியா, இப்போது வெளி நிறுவனங்கள் மூலமான எரிபொருள் வழங்கலுக்கும் இலங்கைக்காகப் பிணை நிற்கப் போவதாகவும் செய்திகள் வெளிவருகின்றன.

இதேசமயம் –

எரிபொருள் கொள்வனவுக்காக இலங்கை அரசுத் தரப்பு பல வெளிநிறுவனங்களுடன் ஓயாது ஊடாட்டத்தில் அலையும் சூழலில் தவிச்ச முயல் அடிக்கும் முயற்சி இங்கு நடக்கலாம் என்று எச்சரிக்கப்பட்டிருக்கின்றது.

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய்க்கான தேவை – கேள்வி – குறைந்திக்கின்றமையால் அதன் விலை பெருமளவில் வீழ்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

சில மசகு எண்ணெய் வகைகள் 8.4 வீதமும், வேறு சில வகை 9.1 வீதமும் திடீர் வீழ்ச்சியைக் காட்டியிருக்கின்றன என்று சுட்டப்படுகின்றது.

இந்தப் பின் புலத்தில் 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீஸலை ஐந்து கோடி டொலருக்குக் குறைவான விலையில்தான் கொள்வனவு செய்ய வேண்டும், அதற்குக் கூடிய விலையில் இலங்கை வாங்கக் கூடாது என்று வர்த்தகத் தரப்புகள் ஆதாரத்துடன் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

இதற்கிடையில் –

40 ஆயிரம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய்க் கப்பலுக்கு ஒழுங்குபடுத்தல் என்ற பெயரில் இடையில் இருக்கும் சில திருடர்கள் சுமார் எழுபது கோடி ரூபா வரை 'கொமிஷன்' அடிக்கின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வெளிப்படையாகக் குற்றம் சுமத்துகின்றார்.

நாடு எரிபொருளுக்குக் கையேந்தி அலையும் சூழலைப் பயன்படுத்தி, வழமையான திருடர் கூட்டம் தவிச்ச முயல் அடிக்கும் வேலையை நிச்சயம் முன்னெடுக்கும்.

எரிபொருளுக்கு வரிசையில் தவம் கிடக்கும் மக்கள் இந்தக் கொள்ளைக் கூட்டத்துக்கும் சேர்த்துதான் பணம் செலுத்திக் கிடைக்கும் எரிபொருளை வாங்க வேண்டியிருக்கும்.

# பிரதமர் ரணிலின் திட்டம் நிறைவேறினால் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெறும்

### கலாநிதி ஹர்ஷ டி சில்வா கிண்டல்



பிரதமர் உறுதியளித்த போதிலும் ஓகஸ்ட் மாதத்துக்குள் நாட்டின் கடன்களை மறுசீரமைக்க முடியாது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரையை மேற்கோள்காட்டி கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஆறு மாத காலத்துக்குள் நாட்டின் பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்ய அநுர குமார திஸாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட திட்டம் நடைமுறைக்கு மாறானது என பிரதமர் கூறினார்.

அவ்வாறு என்றால் பிரதமரால் முன்வைக்கப்பட்ட திட்டம் நிறைவேற்றப்பட்டால் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடிக்கக்கூடிய ஒன்று என ஹர்ஷ டி சில்வா சாடினார்.

ஓகஸ்ட் மாதத்துக்கு இன்னும் மூன்று வாரங்களே உள்ள நிலையில் இந்த கடனை மூன்று வாரங்களில் மறுசீரமைக்க முடியும் என்பதில் தனக்கு நம்பிக்கை இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடன் பதவி விலகவேண்டும்

### அமைச்சர் தம்மிக்க வலியுறுத்து



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் பதவியில் இருந்து விலக வேண்டும் என அமைச்சர் முதலீடு மற்றும் ஊக்குவிப்பு அமைச்சர் தமிக்க பெரேரா கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கையின் நிதியமைச்சர் பேரழிவிற்குத் திட்டமிட்டுள்ளார் என சாடியுள்ள அவர், தற்போதைய டொலர் நெருக்கடியைத் தீர்க்க நிதி அமைச்சரிடம் எந்த திட்டமும் இல்லை என்றும் தெரிவித்தார்.

பொருளாதார சவால்கள் அனைத்தும் டொலரில் தங்கி இருக்கின்றன என சுட்டிக்காட்டிய தமிக்க பெரேரா, நிதியமைச்சர் நண்பர்களிடம் இருந்து கடன் வாங்கத் திட்டமிட்டுள்ளார் எனவும் கூறினார்.

தற்போதைய நிதி அமைச்சராகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் உள்ள எரிபொருள்கள் பிரச்சினையை ஆட்சியாளர்கள் தமக்குச் சாதகமாக்குகின்றனர்

### மருத்துவ நிபுணர்கள் அமைப்பு குற்றச்சாட்டு

நாட்டில் நிலவும் எரிபொருள் பிரச்சினையை ஆட்சியாளர்கள் தமக்குச் சாதகமாக்கி, மக்களின் கவனத்தைத் திசை திருப்புகின்றனர் என மருத்துவ நிபுணர்கள் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

தற்போதைய நெருக்கடி நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இந்தக் கோரிக்கைக்கு செவிசாய்க்காவிடின் நாட்டின் வீழ்ச்சியைத் தடுப்பதற்காக நாடாளாவிய ரீதியில் முழுமையான தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் அது எச்சரித்துள்ளது.

மேலும்பாரியஅமைதிப்போராட்டங்களை நடாத்துவது தொடர்பாகச் சிந்திக்குமாறு சகல தரப்பினரிடமும் இலங்கை மருத்துவ நிபுணர்கள் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது,

நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே மருத்துவ நிபுணர்கள் அமைப்பு மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது.

# நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் நிலக்கரி கையிருப்பு முடிவடையும் நிலை?

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் நிலக்கரி கையிருப்பு முடியும் தறுவாயில் காணப்படுவதாக, மின் நிலைய உள்ளகத் தகவல்களை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிலக்கரி கையிருப்பு இன்னும் 80 நாள்களுக்கு மாத்திரமே எஞ்சியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அனல்மின் நிலையத்தின் மூன்று மின் ஆலைகளை இயக்குவதன் மூலம் 900 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இதில் 810 மெகாவோட் மின்சாரம் தேசிய தேவைகளுக்காக பயன்படுத்தப்படுவதுடன் 90 மெகாவோட் மின்சாரம் மின் உற்பத்தி நிலையத்தின் தேவைகளுக்காகப் பன்படுத்தப்படுகின்றது.

எனினும், இயந்திரங்கள் பழுதுபார்க்கப்படுவதால் தேசிய ரீதியில் வழங்கப்படும் மின்சாரத்தின் அளவு 270 மெகாவோட்களால் தற்பொழுது குறைவடைந்துள்ளது.

ஓர் இயந்திரம் பழுதுபார்க்கப்பட்டாலும் மற்றுமொரு இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கு75நாள்கள்அவகாசம்தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் இயந்திரங்களைப் பழுதுபார்க்க வேண்டியிருப்பதால் குறைந்தளவில் நிலக்கரி கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டிருந்ததாக அனல்மின் நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் முழு வீச்சில் இயந்திரங்கள் இயங்கும். இதன்போது கூடுதல் அளவில் நிலக்கரி தேவைப்படும் எனவும் அவற்றைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# நான்காவது தொழில் புரட்சிக்கு இந்தியாவே வழிகாட்டுகின்றது!



## பிரதமர் மோடி பெருமிதம்

இந்திய அரசின் திட்டங்கள் தொழில்நுட்பத்தை அணுகக்கூடியதாகவும், சேவைகளை மேம்படுத்தவும் மற்றும் 'ஸ்டார்ட்அப்'களை ஊக்குவிக்கவும் வழி செய்வதன் மூலம் நான்காவது தொழில் புரட்சிக்கு இந்தியாவே வழிகாட்டுகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி காந்தி நகரில் கடந்த திங்கட்கிழமை தெரிவித்தார்.

சிப் பெறுபவர் நிலையிலிருந்து சிப் உற்பத்தியாளராக வர இந்தியா விரும்புகிறது. செமிகண்டக்டர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் இந்தியாவில் முதலீடு வேகமாக அதிகரித்து வருகிறது" - என்று அவர் 'டிஜிற்றல் இந்தியா வாரம் - 2022 இல்' தெரிவித்தார். அதில் தொழில்நுட்பம் மற்றும் டிஜிற்றல் மயமாக்கலை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் தொடங்கப்பட்டன.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட டிஜிற்றல் இந்தியா திட்டம், முன்னேற்றத்திற்கு தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைக் காட்டியது. மூன்றாம் தொழில் புரட்சியின் போது இந்தியாவிற்கு ஏற்பட்டதைப் போன்று நவீன தொழில்நுட்பத்தை பின்பற்றாத நாடு பின்தங்கியுள்ளது.

"ஆனால் இன்று நான்காவது தொழில் புரட்சியான 'தொழில்துறை 4.0' இல் இந்தியா உலகிற்கு வழிகாட்டுகிறது என்று பெருமையுடன் கூறலாம் என்று மோடி கூறினார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் குறைந்தபட்சம் 14 லட்சம் பேரை திறமையாக்கி, அவர்களின் தகுதியை மேம்படுத்தி, மறுதிறன் பெற்றவர்களாக வளர்ப்பதன் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் சிப்ஸ் - டு - ஸ்டார்ட்அப் திட்டத்தின் கீழ் 30 நிறுவனங்களுக்கு இந்திய அரசு உதவும். இதன் கீழ் விண்வெளி, மேப்பிங், ட்ரோன்கள், கேமிங் மற்றும் அனிமேஷன் ஆகிய துறைகள் விரிவாக்கப்படவுள்ளன.

வாழ்க்கைச் சான்றிதழ்கள், முன்பதிவுகள் மற்றும் வங்கிச் சேவைகள் போன்ற சேவைகள் அணுகக் கூடியனவாகவும், மலிவு விலையாகவும் மாறிவிட்டன. நேரடி பயன் பரிமாற்றத்தின் கீழ், கடந்த 8 ஆண்டுகளில் ரூ.23 லட்சம் கோடிக்கும் அதிகமான பணம் பயனாளிகளின் கணக்குகளுக்கு நேரடியாக மாற்றப்பட்டுள்ளது.

"இந்தத் தொழில்நுட்பத்தால், நாட்டின் ரூ.2.23 லட்சம் கோடி தவறானவர்களின் கைகளில் சிக்காமல் காப்பாற்றப்பட்டுள்ளது," என்றார் மோடி.

டிஜிற்றல் இந்தியா அரசாங்கத்தை குடிமக்களின் வீட்டு வாசல்களுக்கு அவர்களின் தொலைபேசிகள் மூலம் கொண்டு வந்துள்ளது.

அதேபோல், கிராமப்புறச் சொத்துகளுக்கான ஆவணங்கள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வழங்கப்படுகின்றன.

ட்ரோன்களைப் பயன்படுத்தி கிராமப்புற சொத்துக்களை டிஜிற்றல் மேப்பிங் செய்யும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

கொவிட் - 19ஐ எதிர்த்துப் போராடுவதற்கு டிஜிற்றல் இந்தியா உதவியதாக மோடி கூறினார். உலகின் மிகப் பெரிய மற்றும் மிகவும் திறமையான கொவிட் தடுப்பூசி மற்றும் கொவிட் நிவாரணத் திட்டத்தை நாங்கள் நடத்தி வருகிறோம். - என்றார் அவர்.

ஒரே கிளிக்கில் கோடிக்கணக்கான பெண்கள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் வங்கிக் கணக்குகளுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்க்களை அரசு மாற்றுகிறது.'ஒரே நாடு; ஒரே ரேஷன் அட்டை'யின் உதவியுடன், 80 கோடிக்கும் அதிகமான நாட்டு மக்களுக்கு இலவச ரேஷன் வழங்குவதை அரசு உறுதி செய்துள்ளது.

இந்தியாவின் நிதி தொழில்நுட்ப (பின்டெக்) துறை உண்மையிலேயே மக்களால், மக்களுக்காக ஒரு தீர்வாகும். குறைந்தபட்சம் 40 சதவீத டிஜிற்றல் பரிவர்த்தனைகள் இந்தியாவில் நடைபெறுகின்றன என்றார் அவர்.

இந்திய மொழிகளில் குரல் அடிப்படையிலான அணுகல் உள்ளிட்ட இணையம் மற்றும் டிஜிற்றல் சேவைகளை எளிதாக அணுகவும், இந்திய மொழிகளில் உள்ளடக்கத்தை உருவாக்கவும் 'டிஜிற்றல் இந்தியா பாஷினி' என்ற புதிய முயற்சியானது உதவும்.

மற்றொரு திட்டம் டிஜிற்றல் இந்தியா 'ஜெனிசிஸ்' (புதுமையான தொடக்கங்களுக்கான பொது ஆதரவு) - இந்தியாவின் அடுக்கு - II மற்றும் அடுக்கு - III நகரங்களில் வெற்றிகரமான தொடக்கங்களைக் கண்டறியவும், ஆதரிக்கவும், வளரவும் மற்றும் வெற்றிகரமான தொடக்கங்களை உருவாக்கவும் ஒரு தளமாகும். இத்திட்டத்திற்காக மொத்தம் 750 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

'MyScheme', ஒரு சேவை கண்டுபிடிப்பு தளம், அரசாங்க திட்டங்களை அணுகுவதற்கு உதவுகிறது. C2S திட்டம் குறைக்கடத்தி சிப் வடிவமைப்பில் சிறப்பு மனித வளத்தைப் பயிற்றுவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு மட்டுமல்ல

## மேலும் பல நாடுகளின் கதவை அது தட்ட ஆரம்பித்து விட்டது



நாட்டில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடியை சமாளிக்க பல்வேறு நாடுகளிடமிருந்தும் உதவிகளைக் கோரிப் பெற்று வருகிறது இலங்கை.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக பள்ளிகள் பல நாள்களாக மூடப்பட்டுள்ளன. ஆசிரியர்களும், பள்ளி மாணவர்களும் பள்ளிக்கு வருவதற்குத் தேவையான எரிபொருள் இல்லாததே, இந்த தொடர் விடுமுறைக்குக் காரணமாக அமைந்துவிட்டது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் வகையில், சர்வதேச நிதியத்திடமிருந்து உதவியைப் பெற நாடு நடவடிக்கை எடுத்திருப்பதாக அந்நாட்டு பிரதமர் கூறியிருந்தார்.



உக்ரைனில் நடந்துவரும் போரின் காரணமாகவும் அதன் தொடராக உணவு மற்றும் எரிபொருள் விலையேற்றம் காரணமாகவும் பொருளாதார பாதிப்புக்குள்ளான ஒரே நாடு இலங்கை என்று கருதினால் அது முற்றிலும் தவறு. உலகம் முழுவதும் ஏற்கனவே பொருளாதார சிக்கலில் இருந்த நாடுகளுக்கும் இது ஒரு அபாயமணியாகவே அடிக்கிறது. உதாரணத்துக்கு பாகிஸ்தான், வெனிசுலா.

பொருளாதார சிக்கல் காரணமாக 94 நாடுகளில் வாழும் 160 கோடிமக்கள், உணவு, எரிபொருள், நிதிச்சுமை போன்ற ஏதேனும் ஒரு சிக்கலை நிச்சயம் எதிர்கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக பொருளாதார சிக்கல் கடுமையாக பாதித்திருக்கும் நாடுகளில் வாழும் 120 கோடி மக்கள் தங்களின் வாழ்வாதாரத்துக்கு செலவிடும் அதிகப்படியான தொகையால் கடும் நிதிச்சுமையால் அவதியுற்று வருவார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நெருக்கடி மீட்புக் குழுவினர் கடந்த மாதம் நடத்திய ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

உலகில் உள்ள ஏழ்மையான நாடுகளில் பாதிக்கும் மேல், மிகப்பெரிய கடன் நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகின்றன அல்லது அதன் அபாயத்துக்கு அருகில் உள்ளன என்கிறது ஐ.நா.

பல நாடுகள் ஏற்கனவே ஊழல், உள்ளூர் போர், இதர பேரிடர்களால் பொருளாதார பாதிப்புக்குள்ளாகி விட்டன. உதாரணமாக ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சிக்குப் பிறகு அங்கு மிகப்பெரிய பொருளாதார சிக்கல் ஏற்பட்டுள்ளது. பல நாடுகளின் நிதியுதவிகள் நிறுத்தப்பட்டுவிட்டன. தலிபான் அரசை ஏற்காத பல பணப்பரிமாற்றங்கள் நிறுத்தப்பட்டுவிட்டன.

ஆர்ஜென்டினாவை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு 10 பேருக்கும் 4 பேர் ஏழைகளாக இருக்கிறார்கள். அந்நாட்டு வங்கிகள் வெளிநாட்டுப் பணப்புழக்கம் இல்லாமல் கடும் சிக்கலை சந்தித்து வருகின்றன.

கொரோனாவுக்கு முன்பு வரை வேகமாக வளர்ச்சியடையும் பொருளாதாரத்தைக் கொண்டிருந்த லாவோஸ், இலங்கைக்கு நிகராக கடன்சுமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இதே வரிசையில்தான் லெபனான், மியன்மார், பாகிஸ்தான், போன்ற நாடுகளும் உள்ளன. இதனுடன் துருக்கி, ஜிம்பாப்வே உள்ளிட்ட நாடுகளும் இணைந்து கொண்டுள்ளன.

(மூலம்: த ஹிண்டு)

# நாடு மிகவும் மோசமான நிலைமையை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது!

## ஈரோஸ் ஜனநாயக முன்னணிப் பொதுச் செயலாளர் கருத்து

(க.கிருபாகரன்)





நாடு மிக மோசமான அரசியல் பொருளாதார நெருக்கடியால் திண்டாடிக் கொண்டிருக்கின்றது. இன்னொரு பக்கம் நாட்டை மீட்டெடுக்கும் போராட்டத்தை இளைஞர்கள் இரண்டு மாதங்களுக்கும் மேலாக தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர். இது ஒரு தேசிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இந்த சூழலில் தமிழ் பேசும் மக்களுடைய உணர்வுகளை -பிரச்சினைகளை பெரும்பான்மை சிங்கள மக்கள் புரிந்துகொள்ள ஆரம்பித்துள்ளனர். தமிழ்பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு சிங்கள மக்கள் மத்தியிலிருந்து ஆதரவுக் குரல் எழும்பியிருக்கும் நிலையில், நாட்டின் தேசிய பிரச்சினையிலிருந்து தமிழ்பேசும் மக்கள் ஒதுங்கி நிற்கின்றமை எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுவதற்கு சாதகமான சூழலை உருவாக்குமா? என ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் இரா.ஜீவன் இராஜேந்திரம் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணனுக்கும் சமூக செயற்பாடாளர்களுக்குமிடையில் ஹற்றனில் கிருஸ்ணபவான் கலாசார மண்டத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

தற்போது சிங்கள மக்கள் மீதான அரச பயங்கரவாத அடக்குமுறைகள், உரிமை மறுப்பு இவைகளால் தமிழ்பேசும் மக்கள் அனுபவித்த வேதனைகளுக்காக வருந்துகின்றனர். முள்ளிவாய்க்கால் நினை வேந்தலையும், கறுப்பு ஜூலை நினைவு தினத்தையும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்குமளவுக்கு நல்ல மனமாற்றம் ஏற்பட்டுள்ளது. இது தமிழ்பேசும் மக்களும், சிங்கள மக்களும் ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுவதற்கான சிறந்த வாய்ப்பாகும். அதேபோல் இன்னொரு பக்கம் இந்த நாட்டுக்காக கடந்த 200 வருடங்களாகத் தங்களின் கடுமையான உழைப்பின் மூலம் நிரந்தரவருமானத்தை ஈட்டிக் கொடுத்துக் கொண்டு இன்றும் நிலவுரிமையற்ற சமூகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் மலையகத் தமிழர்களின் காணி உரிமை, பெருந்தோட்டதொழிலாளர்களுக்கான வாழ்க்கைச் செலவிற்கும் உழைப்புக்கும் ஏற்ற சம்பள உயர்வு, தேசிய அரசியல் நீரோட்டத்தில் முழுமையாக இணைத்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கைகளிலுள்ள நியாயங்களையும் புரிந்துக் கொள்ளுகின்றனர்.

மேலும் தற்போதைய பொருளாதார நிலை முழுநாட்டு மக்களையும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது அதிலும் மலையக மக்களை மிகமோசமாகப் பாதித்துள்ளது. உணவுத்தேவையைக் கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாதளவிற்குத் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து அவர்களை பாதுகாத்துக் கொள்ளுவதற்கேற்ப உப உணவு உற்பத்தியை மேற் கொள்ளுவதற்கு ஏற்ற காணிகளைப் பெற்றுக்கொடுக்கவும், பயிற்சி ஆலோசனை வழங்குவதற்கும், சுய உணவு உற்பத்தி தொடர்பான ஊக்குவிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற் கொள்ளுவதற்குமான ஒழுங்குகளை மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்துக் கொடுக்க வேண்டும்.

அத்தோடு வீழ்ந்து கிடக்கும் இந்த நாட்டை மீட்டெடுக்கும் சுமையை காலிமுகத்திடல் போராட்டக்கள இளைஞர்களின் தோள்களில் சுமத்திவிட்டு, பார்வையாளர்களாக இருக்காமல் இளைஞர்களோடு அரசியல் தொழிற்சங்க சிவில் அமைப்புகள், பொதுமக்கள் என அனைவரும் பேதங்களை மறந்து இந்தநாட்டுக்காகக் கைகோர்த்துக் கொண்டு புதிய மாற்றத்துக்காக முன்னோக்கிச் செல்ல வேண்டும். இதற்கப்பால் நாட்டில் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகள் உலகறிந்த விடயமாகும். எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இந்த நாடு இருக்கவேண்டும்.

ஆகவே, நாம் பார்வை யாளர்களாகவா அல்லது மாற்றத்தில் பங்காளியாகவா இருக்கப்போகின்றோம் என்பதை சிந்தித்து முடிவெடுக்கும் தருணம் இதுவாகும். – என்றார்.

## கடன் மற்றும் குத்தகை மீளச் செலுத்துகையை பிற்போட இம்ரான் எம்.பி. பிரதமரிடம் கோரிக்கை

(எப்.முபாரக்)



நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் கடன் பெற்றவர்களும் குத்தகைக்கு வாகனம் பெற்றவர்களும் அதனை மீளச் செலுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே, கடன் மற்றும் குத்தகை (லீசிங்) மீளச் செலுத்துகையை குறித்த காலத்துக்குப் பிற்போட நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் பிரதமரும், நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

நாட்டில் பல்வேறு அரச அலுவலகங்களில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களும் தனிப்பட்ட வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வங்கிகளில் கடன் பெற்று அதனை மீளச் செலுத்தி வருகின்றனர்.

இதேபோல வாகனங்களைக் குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்தோர்களும் தவணை அடிப்படையில் அதனை மீளச் செலுத்தி வருகின்றனர்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக அனைத்துப் பொருள்களினதும் விலை அதிகரித்து மக்களின் வாழ்க்கைச்செலவு மிக அதிகளவில் உயர்ந்துள்ளது. இதனால் பொதுமக்கள் தமது நாளாந்த வாழ்வாதாரச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குக் கூட மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதேபோல வாகனங்களைப் பயன்படுத்தி தொழில் செய்வோர் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக நாள்கணக்கில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தங்கி இருக்கின்றனர். இதனால் இவர்கள் வாகனங்களைத் தொழிலுக்குப் பயன்படுத்தி வருமானம் பெற முடியாத நிலையில் உள்ளனர். இந்த நிலைமைகளைத் தாங்களும் அறிவீர்கள் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

நாட்டு மக்கள் தமது அன்றாட உணவுத் தேவையைக் கூட பூர்த்தி செய்யப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வரும் இந்நிலையில் கடன் மற்றும் குத்தகைகளை மீளச் செலுத்துவதில் இதனோடு தொடர்பு பட்டவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு கடன் மற்றும் லீசிங் மீளச் செலுத்துகைகளை குறித்த காலத்திற்குப் பிற்போட ஏற்பாடு செய்யுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன். இது விடயத்தில் தங்கள் அதிகபட்சம் கவனம் செலுத்துவதைப் பெரிதும் வரவேற்கிறேன். இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





## நிவாரண பொருள்கள் தம்பலகாமத்தில் வழங்கல்!

இந்தியாவின் தமிழ் நாட்டின் இரண்டாம் கட்ட மனிதாபிமான நிவாரணப் பொருள்கள் நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள தெலுங்கு நகர் பகுதியில் வழங்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இந்த நிவாரணப் பொதிகள் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்காக வழங்கி வைக்கப்பட்டன.

இவ்வாறு இந்த நிவாரணப் பொதிகள் பொருளாதார நெருக்கடி காரணமாக தொழில் இழந்த விவசாயிகள் அன்றாட கூலித் தொழிலாளிகள் மற்றும் வறுமையின் கீழ் வாழ்பவர்களும் தெரிவு செய்யப்பட்டே இந்த நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அனஸ் தலைமையின் கீழ் இடம் பெற்றது.

# 69 லட்சம் மக்களும் வீதியில் இருந்து ஜனாதிபதி கோட்டாவை சபிக்கிறார்கள்!

## நளின் பண்டார சாட்டை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மக்களாணை உண்டு என குறிப்பிடுவது முற்றிலும் தவறானது. 69 லட்சம் மக்கள் வீதியில் இருந்து ஜனாதிபதியை சபிக்கிறார்கள்.

'கோ ஹோம் கோட்டா' என அழுத்தமாக குறிப்பிடுகிறார்கள். நாங்கள் சர்வ கட்சி அரசாங்கத்தில் ஒன்றிணையத் தயார் அதற்கு முன்னர் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நளின் பண்டார சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாட்டின் தற்போதைய பிரச்சினைகள் அனைத்தும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்டன.

எரிபொருள் இறக்குமதி தொடர்பில் வலுசக்தி அமைச்சர் கடந்த வாரம் கட்டார் சென்றார். சென்றதன் பின்னர் தான் கட்டாரிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்ய முடியாது என்று தெரிவிக்கப்பட்டது. – என்றார்

இதன்போது குறுக்கிட்ட வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தவறான விடயத்தை சமூகமயப்படுத்த வேண்டாம். கட்டார் நாட்டு ஜனாதிபதியின் அழைப்பிற்கமையவே விஜயத்தை மேற்கொண்டோம்.

நாட்டில் தற்போது நெருக்கடிக்குள்ளாகி உள்ள எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

பெற்றோல் மற்றும் விமான எண்ணெய் வழங்கப்படமாட்டாது என்பதை மாத்திரம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும் டீசல், உராய்வு எண்ணெய் மற்றும் மசகு எண்ணெய் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதாக கட்டார் குறிப்பிட்டுள்ளது. ஆகவே, தவறான விடயங்களை சமூக மயப்படுத்த வேண்டாம் எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய நளின் பெர்னான்டோ –

எரிபொருள் இறக்குமதி தொடர்பில் குறிப்பிடப்படுகிறது. சகல நெருக்கடிகளுக்கும் மூலகர்த்தாவானவரைத் தலைமையாக வைத்துக் கொண்டு பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகப் பேசப்படுகிறது.

ஹரின் பெர்னான்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் அரசாங்கத்தை தூய்மைப்படுத்துபவர்களாகச் செயற்படுகிறார்கள்.

கொள்கைக்கு முரணாக செயற்படுகிறார்கள். நாடு தீப்பற்றி எரியும் வகையில் நெருக்கடிகளை தீவிரப்படுத்திய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தலைமைத்துவமாகக் கொண்டு எப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மக்களாணை உண்டு என ஆளும்தரப்பினர் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. 69 லட்சம் மக்கள் வீதியில் உள்ளார்கள்,ஜனாதிபதியை சபிக்கிறார்கள். அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை 3 சதவீதமாகக் காணப்படுகிறது.

மகாநாயக்க தேரர்களின் அறிவுறுத்தலுக்கமைய சர்வக்கட்சி அரசாங்கத்தில் ஒன்றிணையத் தயார். ஆனால் நெருக்கடிகளின் நிர்மாணிப்பாளரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும். நாட்டு மக்களின் அபிலாஷைக்கு மதிப்பளித்து ஜனாதிபதி பதவி விலக வேண்டும். – என்றார்.

# ரணில் தனது பதவியை இராஜினாமாச் செய்தாலும் என்னை பிரதமராக்கும் அதிகாரம் அவருக்கில்லை!

## அநுர சாட்டை



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகினாலும் என்னை பிரதமராக நியமிப்பதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆறு மாதங்களுக்குள் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடிந்தால், அநுரகுமார திஸாநாயக்கவுக்கு பிரதமர் பதவியை விட்டுக்கொடுக்கத் தயார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியதற்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனது அறிக்கையின் ஒரு பகுதியை மாத்திரமே பிரதமர் எடுத்துக்கொண்டார் என தெரிவித்த அநுர, மக்களின் அடிப்படைத் தேவைகளான எரிபொருள், எரிவாயு, மருந்து போன்றவற்றை ஆறு மாதங்களுக்குள் வழங்க வேண்டும் என்றும் அதன் பின்னர் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்றே தான் கூறினேன் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கோ அல்லது தனக்கோ பிரதமராக செயற்படுவதற்கான ஆணை இல்லை என்றும் ரணிலுக்கு நாடாளுமன்றத்தில் அமரக்கூட ஆணை இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

நான்கு தசாப்த கால தோல்வியடைந்த பொருளாதார மற்றும் அரசமைப்பால் பாழடைந்த பொருளாதாரத்தை ஆறு மாதங்களுக்குள் புத்துயிர் பெற முடியாது என்றும் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண நிலையான மற்றும் நம்பகமான அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் மற்றும் அரசியல் கலாசாரத்தின் நீண்டகாலத் தோல்வி காரணமாக நாடு கடுமையான பொருளாதார கொந்தளிப்பை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இந்த பொருளாதார வீழ்ச்சியில் செல்வாக்கு செலுத்திய இந்த அரசியல் கலாசாரம் முதலில் மாற்றப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

ஆறு மாதங்களுக்குள் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாது என்றும் கடன் நெருக்கடி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பற்றாக்குறை, உற்பத்தி சரிவு மற்றும் மாநில வருவாய் என்பனவற்றை ஆறு மாதங்களுக்குள் சரி செய்ய முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உரக் கப்பலின் வருகை மேலும் தாமதமாகுமாம்!

*கொழும்பை நேற்று (புதன்கிழமை) வந்தடையும் என எதிர்பார்க்கப்பட்ட யூரியா உரக் கப்பல் வருகை மேலும் தாமதமாகும் என கொமர்ஷல் உர நிறுவனம் தெரிவித்துள்ளது.*

*கடற்காற்றின் தாக்கம் காரணமாக கப்பல் எதிர்வரும் 9ஆம் திகதி இரவு கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் என வர்த்தக உர நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.*

*ஓமானில் உள்ள 'சௌ ஓமன்' என்ற துறைமுகத்தில் இருந்து கடந்த 03 ஆம் திகதி கப்பல் புறப்பட்டதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.*

*இந்தக் கப்பல் நேற்று இலங்கையை வந்தடையும் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.*

*எனினும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நிலவும் கடும் காற்றின் தாக்கம் காரணமாக யூரியா உரக் கப்பல் 9ஆம் திகதி இரவு இலங்கையை வந்தடையும் எனக் குறிப்பிடப்படுகின்றது.*

*இந்த கப்பலில் 40 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.*

# வவுனியா மாவட்டத்தில் எரிபொருளை சீரமைக்ககோரி அரச அதிபருக்கு கடிதம்!

வவுனியா மாவட்டத்தில் எரிபொருளை பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட நாள்களாக வீதிகளில் காத்திருக்க வேண்டிய நிலை காணப் படுகின்றமை தொடர்பில் வவுனியா மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து மக்கள் அமைப்பு என்ற ரீதியில் அரசாங்க அதிபரிடம் கடிதமொன்றைக் கையளித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் விவசாயிகள், ஓட்டோ சாரதிகள், பஸ் உரிமையாளர்கள், வர்த்தக சங்கத்தினர், ஊடகவியலாளர்கள் ஆகியோரை உள்ளடக்கி கையளிக்கப்பட்ட குறிப்பிட்ட கடிதத்தில் வவுனியா மாவட்டத்தில் பொது மக்கள் உட்பட அனைத்து துறையினருக்கும் எரிபொருளை வழங்க சீரான நடைமுறையை மேற்கொள்ள வலியுறுத்தியுள்ளனர்.

இதன் பிரகாரம் இவ்விடயம் தொடர்பாக அரசாங்க அதிபர் தலைமையில் விசேட கூட்டமொன்றுக்கு ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை முடியும் வரை எனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்கிறேன்!

## நிமல் சிறிபால டி சில்வா திட்டவட்டம்



இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணை முடியும் வரை தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்கிறேன் என நிமல் சிறிபால டி சில்வா அறிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டு தொடர்பில் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எழுதியுள்ள கடிதத்திலேயே நிமல் சிறிபால டி சில்வா தனது இராஜினாமாவை அறிவித்துள்ளார்.

இதேவேளை, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

விமான போக்குவரத்து அமைச்சு தனியார் நிறுவனமொன்றுடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பாக பக்கச்சார்பற்ற மற்றும் சுயாதீனமான விசாரணைகள் இடம்பெறும் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதுவரையில் தனது அமைச்சுப் பதவியை நிமல் சிறிபால டி சில்வா இராஜினாமாச் செய்வார் என ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நீதியை நாடுவதற்கான சமத்துவத்தன்மையை உறுதிசெய்வது நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு இன்றியமையாதது!

## இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் சுட்டிக்காட்டு



இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதற்கு நீதியமைச்சால் முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்குப் பங்களிப்புச்செய்யும் நோக்கில் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் ஒரு கோடியே 50 லட்சம் டொலர்களை வழங்கியிருப்பதாகத் தெரிவித்திருக்கும் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங், நீதியை நாடுவதிலுள்ள சமத்துவத்தன்மை பொருளாதார உறுதிப்பாட்டுக்கு மிகவும் அவசியம் என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இலங்கையின் சட்டக்கட்டமைப்பை சர்வதேச சட்டக் கட்டமைப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சி தொடர்பான கடப்பாடுகளுக்கு அமைவானதாக மேம்படுத்துவதற்கு அவசியமான உதவிகளை நீதியமைச்சு மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டமைப்புக்களுடன் இணைந்து வழங்குவதன் மூலம் இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகத் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"நீதியை நாடுவதற்கான சமத்துவத்தன்மையை உறுதிசெய்வதென்பது பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு இன்றியமையாததாகும்.

"அந்தவகையில் இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கான நீதியமைச்சின் முயற்சிக்குப் பங்களிப்புச்செய்யக்கூடிய வகையில் பயிற்சிகளை வழங்குவதற்கும், தொழில்நுட்பங்களை நவீனமயப்படுத்துவதற்கும், இலங்கையின் சட்டக்கட்டமைப்பில் பெண்களின் வகிபாகத்தை மேம்படுத்துவதற்கும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் ஒரு கோடியே 50 லட்சம் டொலர்களை வழங்குகின்றது" – என்று அவர் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# மிஸ்டர் பீன் போன்று செயற்படாதீர்கள் பிரதமரிடம் விஜித்த ஹேரத் தெரிவிப்பு



மிஸ்டர் பீன் போன்று செயற்டாமல் பொறுப்புள்ள பிரதமராக மக்களின் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பதை மக்களுக்கு தெரிவிக்கவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் விஜித்த ஹேரத் பிரதமரை நோக்கி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (புதன்கிழமை) பிரதமரிடமான கேள்வி நேரத்தின் போது விஜித்த ஹேரத் எம்.பி. மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சுட்டிக் காட்டி, இந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்வு என்ன?. அதேபோன்று எதிர்வரும் 23ஆம் திகதி எரிபொருள் கப்பல் வருவதாக அமைச்சர்கள் இந்த சபையில் தெரிவித்திருந்தனர்.

ஆனால், தற்போது அந்த கப்பல் வருவது தொடர்பில் எந்த நம்பிக்கையும் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதனால் நாடாளுமன்றத்தை தவறாக வழிநடத்திய அமைச்சர்களுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை என்ன எனக் கேட்டார்.

இதற்குப் பதிலளிக்க எழுந்த பிரதமர், பதில் வழங்குவதற்கு முன்னர், அரசாங்கத்தை பொறுப்பேற்கின்றீர்களா? இல்லையா? என்பதற்கு மாத்திரம் பதில் சொல்லுங்கள். உங்களின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பொறுப்பேற்பதில்லை எனத் தெரிவித்தார். நீங்கள் பொறுப்பேற்பதாக குறிப்பிட்டீர்கள். இதில் ஏதாவது ஒன்றை தெரிவியுங்கள். – என்றார்.

இதன்போது எழுந்த விஜித்த ஹேரத் எம்.பி., மிஸ்டர் பீன் போன்று செயற்படாது பொறுப்புள்ள பிரதமராக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுத்திருக்கும் நடவடிக்கையை தெரிவியுங்கள். நீங்கள் மிஸ்டர் பீன் போன்று செயற்படுவதாக இருந்தால் எதிர்க்கட்சிக்கு வந்து அமர்ந்துகொள்ளுங்கள். அதனால் நீங்கள் தற்போது மிஸ்டர் பீன் ஆகவேண்டாம்.

நீங்கள் தற்போது நாட்டின் பொறுப்புமிக்க பிரதமர். அதனால் நாங்கள் கேட்கும் மக்களின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குப் பதிலளியுங்கள் அவ்வாறு இல்லாமல் தேவையற்ற பேச்சுக்களை பேச வேண்டாம். – என்றார்.

# இலங்கைப் பயணத்தை தவிர்த்துக்கொள்ளவும்!

## பிரித்தானியா தமது பிரஜைகளுக்கு எச்சரிக்கை

*இலங்கைக்கான அத்தியாவசியப் பயணங்களைத் தவிர ஏனைய பயணங்களை தவிர்க்குமாறு பிரித்தானிய அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.*

*மருந்துகள், சமையல் எரிவாயு, எரிபொருள் மற்றும் உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளின் பற்றாக்குறை நாட்டில் போராட்டங்களையும் வன்முறையையும் தூண்டியுள்ளது.*

*70 வருடங்களில் மிக மோசமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையில் போராட்டங்கள், அமைதியின்மை மற்றும் பொருள்களுக்குத் தட்டுப்பாடும் நிலவுவதாக சுட்டிக்காட்டியுள்ளது.*

*ஆகவே, விடுமுறைக்குச் செல்பவர்கள் ஆர்ப்பாட்டங்கள், வீதித் தடைகள் மற்றும் அமைதியின்மை ஆகியவற்றை சந்திக்க நேரிடும் என பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு எச்சரித்துள்ளது.*

*மே மாதம் இடம்பெற்ற கலவரத்தை அடுத்து பிரித்தானிய அரசாங்கம் மே 13 ஆம் திகதி முதல் ஜூன் 10 வரை இதேபோன்ற பயண எச்சரிக்கையை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*

# ஒலுவில் மீன்பிடி துறைமுகத்தை வினைத்திறனாக மாற்றுவோம்!

## அதுவே எதிர்பார்ப்பு என்கிறார் அமைச்சர் டக்ளஸ்





ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கடுமையான முயற்சிகளை வரவேற்றுள்ள ஒலுவில் பிரதேச பலநாள் ஆழ் கடல் மீன்பிடிக் கலன்களின் உரிமையாளர்கள் ஒலுவில் துறைமுகத்தின் செயற்பாடுகளை விரைவுபடுத்துவதற்கான பூரண ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று(புதன்கிழமை) நடைபெற்ற கலந்துரையாடலின்போதே மேற்குறிப்பிட்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஒலுவில் துறைமுகத்தினை பலநாள் ஆழ்கடல் கலன்கள் மற்றும் ஒருநாள் மீன்பிடிப் படகுகளை செயற்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய மணல் அகழ்வு மற்றும் ஐஸ் தொழிற்சாலை, மீன் பதனிடும் தொகுதி போன்றவற்றை சிறப்பாக செயற்படுத்துவதற்கும், தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும் ஒலுவில் பிரதேசத்தை சேர்ந்த பலநாள் ஆழ்கடல் மீன்பிடி கலன்களின் உரிமையாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதனை வரவேற்றுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதேசகடற்றொழிலாளர்களின்பங்களிப்புடன், தேவையானளவு தனியார் முதலீடுகளையும் பயன்படுத்தி ஒலுவில் துறைமுகத்தை வினைத்திறனாக மாற்றுவதே தன்னுடைய எதிர்பார்ப்பு என்று தெரிவித்ததுடன், இதனூடாக மறைந்த முஸ்லிம் மக்களின் தேசியத் தலைவர் மர்ஹூம் அஸ்ரபின் விருப்பமும் ஈடேற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-57

**காலிமுகத் திடல் போராட்டங்கள் தமிழ் மக்களுக்கு எதைச் சொல்கின்றன?**

எனது அனுமானத்தில் அந்தக் கூட்டத்தில் (மனோ கணேசன், சுமந்திரன் உட்பட எதிரணியினர் 'கோட்டா கோ கம' தரப்பினருடன் நடத்திய கூட்டத்தில்) சிங்களத்தில் தரப்பட்ட பத்துப் பக்க சமர்ப்



பணத்தில் தமிழ் மக்கள் தனித்துவ இனமாகக் கணிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை இருக்கவில்லை. அதனால்தான் மனோ கணேசன் அதனைப் பற்றியும் குரல் எழுப்ப வேண்டியிருந்தது. மனோ கணேசன் அதனைப் பற்றி பேசிய பொழுது காலிமுகத் திடல் போராளிகள் ஏற்போ, மறுப்போ தெரிவிக்கவில்லை. அதேபோல பங்கு பற்றியிருந்த சிங்களப் பிரதிநிதிகளும் அபிப்பிராயம் ஒன்றும் தரவில்லை. அப்படிப் பார்க்கும்போது காலிமுகத் திடல் தார்மீகங்களும் 'ஒரே நாடு; ஒரே மக்கள்' என்ற பார்வையில், ஆனால் யாபேரும் பேதம் இல்லாது நடத்தப்பட வேண்டும் என்ற கொள்கையைத்தான் கொண்டிருக்கின்றது என்பது புலனாகின்றது.



அவர்கள் எல்லோரது கவனமும் இனப்பிரச்சினைக்கான தீர்வு அல்ல. கோட்டாபயவை எப்படி பதவியில் இருந்து இறக்கி விரட்டுவது என்பதுதான். ஆதலால் தமிழ் மக்கள் தனித்துவமான இனமா, அவர்களுக்குப் பாரம்பரிய பிரதேசங்கள் உண்டா என்பவற்றை 'கோட்டா கோ கம' போராளிகள் கணக்கெடுக்கவில்லை. அல்லது ஏற்றுக் கொள்ளவில்லை.

1977 இல் ஜனாதிபதி ஜே.ஆர். தர்மிஷ்டம் பேசியபோது இருந்த காலச் சூழல் வேறு. அவர் இலங்கையின் மற்றப் பகுதிகளில் தமிழ் மக்கள் குடியேறி, காணிகள் வாங்கி, குடியிருந்து, வியாபாரங்களும் நடத்துவது போல, சிங்கள மக்களும் வடக்குக் கிழக்கு பகுதிகளுக்குக் குடி பெயர்ந்து, வாழ்வதற்கு முட்டுக்கட்டைகளோ எதிர்ப்புகளோ இருக்கக் கூடாது என்றுதான் தனது கொள்கைகளைப் பிரதிபலித்தார். மகாவலியின் திட்டங்களின் கீழும் தானும் நேரடியாக எல்லைப்புறங்களில் குடியேற்றங்களை ஏற்படுத்தினாலும், வெளிப்படையாகப் பெருவாரி காணி அபகரிப்புகக்ளையோ, ஆக்கிரமிப்புகளையோ, குடியேற்றங்களையோ முன்னெடுக்கக் கள நிலைகளும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதிக்கம், பின் விடுதலை புலிகளின் அதிகாரம் போன்றவையும் விடவில்லை.

ஆனால் இலங்கை – இந்திய ஒப்பந்தம் இருந்தாலும், அதன் கீழ் 13ஆம் திருத்தம் அரசமைப்பில் ஏற்படுத்தப்பட்டிருப்பினும், அவற்றை நீக்கி, இப்படியான அபகரிப்புகளையும் குடியேற்றங்களையும் எப்படி ஏற்படுத்துவது என ராஜபக்ஷக்களின் பேரினவாத துணைவர்



களான 'வியத்மக', 'எளிய' போன்ற அமைப்புக்களின் புத்திஜீவிகளின் வடிவமைப்பே விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான போரும், அதன் பின் நடத்தப்படுகின்ற குடியேற்றங்களும், மதத்திணிப்பும், அவற்றுக்கு இராணுவ தொல்பொருள் திணைக்களங்களின் துணையும் கிடைப்பது.

ஆகவே பேரின மக்கள் இவ்வளவு தூரம் வந்ததான பின், யாழ்ப்பாணம் மாத்திரமே தமிழ் பெரும்பான்மையாக இருக்கும்போது, ஏன் தனித்துவப் பிரதேசங்கள் எனப் பேச வேண்டும் என்று எண்ணலாம். அதன் பிரதிபலிப்புகள் வாக்குச்சாவடிகளில் காட்டப்பட்டால் அது வரக்கூடிய ஆட்சிக்கு இடைஞ்சலாக இருக்கும் என காலிமுகத்திடல் போரா




ளிகள் கூட தங்களது தார்மீகங்களையும் நன்னடத்தைக்கும் இணக்கத்திற்கும் கட்டுப்படுத்தலாம். அரசுகள் மாறிய பின், அதிகாரங்கள் கைமாறும் காலத்தில், மற்றைய பேரினவாத கட்சிகளின் போக்கினால் இவை யாவுமே 'பேசியவையாகவே' இருக்கும்.

நல்லாட்சி காலத்தில் சம்பந்தனும் சுமந்திரனும் பேசிய புதிய அரசமைப்பில் சமஷ்டி என வெளிப்படையாக அதன் கட்டமைப்பில் இல்லாவிட்டாலும் அதிகாரங்களை பொறுத்தவரை சமஷ்டியின் இயல்பில் இருக்கும் என்று சொன்னார்கள். அந்த அரசமைப்பு நாடாளுமன்றத்தால் ஏற்கப்படவில்லை. அந்த அரசும் கவிழ்ந்தது. முக்கியம் என்னவெனில் அந்த அமைப்பும் வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என உறுதிப்படத் தெரிவிக்கவில்லை. ஆதலால் இன்றைய நிலையில் சம்பந்தன், சுமந்திரனின், ஏன் கூட்டமைப்பின் அணுகுமுறையும் சமஷ்டிக் கட்டமைப்பு, மாகாண ரீதியான அதிகாரப் பரவலோ, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் தனித்துவங்களை ஏற்று அமைக்கப்படும் என நம்பிக்கை கொள்ள பல தயக்கங்கள் உண்டு. நாடு இன்று எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியில் இவற்றையும் சேர்த்து வலுப்படுத்தலாம் என இவர்கள் தங்களது வழமையான அரசியலை முன்வைத்து பேசலாம். ஆனால் பெரும்பான்மைக் கட்சிகள் அதற்கு இடம் தருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இவர்களைத் தவிர்த்தோ, விலத்தியோ, சிங்கள மிதவாதிகளுடனும், முஸ்லிம் சகோதரர்களுடனும், மலையக உறவுகளுடனும் இணைந்து பேரத்துக்குப் போவோர் கூட, பேரினவாதத்திடமிருந்து இதற்கு மேல் ஏதாவது பெற்றுக் கொள்ளலாம் என்பதும் நம்பிக்கையீனமே. பெரும்பான்மை கட்சிகளுக்கு இவர்கள் தரக்கூடிய வாக்குப் பலத்தில்தான் அது தங்கி இருக்கும்.

ஆகவே ஒரு வழியில் பார்த்தால் இந்தத் தரப்புகள் யாவுமே கூட்டமைப்பு கூட, 1977ஆம் ஆண்டில் ஜே.ஆர். வெளிப்படுத்திய கொள்கைகளின் அடிப்படையில், நாட்டின் எல்லா மக்களும் எங்கும் சென்று குடியேறலாம், எந்தப் பிரதேசமும் ஓர் இனத்துக்கோ அன்றில் ஒரு பிரிவினருக்கோ முன்னுரிமையானது அல்ல என்பதை ஏற்று பயணிக்க வேண்டிய கட்டாயத்தில்தான் உள்ளன. பொருளாதார நெருக்கடிகளின் நிர்பந்தங்களோ,



காலங்களின் மாறுதல்களாலோ, தமிழ்த் தலைவர்கள் நடத்திய அரசியலாலோ வேறு மாற்றங்கள் உருவாகி இருக்கின்றனவா என்று தமிழ் மக்கள் தங்களை தாங்களே கேட்டுக் கொள்ள வேண்டி இருக்கின்றது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பூங்குன்றனாரின் கோட்பாட்டில் முழு நாடுமே கவிழ்ந்து, அதில் தமிழ் மக்களும் மாண்டு விடாமல் இருக்க வேண்டுமானால், தமிழ் மக்களின் தனித்துவங்களும் அதன் தேசியமும் இப்படித்தான் தொடர்ந்து பணிக்க வேண்டும் என்ற ஆறுதல்படுத்தல்களும் நியாயப்படுத்தப்படலாம்.

(வளரும்)

# 1,000 மாற்றுத் திறனாளிகள் பங்குபற்றும் விளையாட்டு விழா



இலங்கையின் இந்த இக்கட்டான சூழ்நிலையில் மீண்டும் மாற்றுத்திறனாளிகளை பேசு பொருளாக்கும் நோக்கோடு மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு விழா இவ்வருடம் 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20,21 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட உள்ளது.

டேட்டா சரிட்டி ( DATA Charity ), மட்டக்களப்பு மாற்றுத்திறனாளிகள் சம்மேளனம் ஆகியன இணைந்து நடாத்தும் இந்த விளையாட்டு விழாவில் கிழக்கு மாகாணத்தில் இருந்து (திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை) 1,000 க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்து கொள்ளும் இந்த விளையாட்டு விழாவுக்கு பிரதான அனுசரணையை அபி டயமன்ட், ராஜ் கிளஸ்டர் மற்றும் லிங்க்ஸ் லீகல் ஆகிய நிறுவனத்தினர் வழங்குகின்றனர்

மட்டக்களப்பில் இருந்து 26 மாற்றுதிறனாளிகள் அமைப்புகளும் , அம்பாறையில் இருந்து 08 மாற்றுத்திறனாளிகள் அமைப்புக்களும் , திருகோணமலையில் இருந்து 04 மாற்றுத்திறனாளிகள் அமைப்புக்களும் இந்த விளையாட்டு விழாவில் கலந்து கொள்கின்றனர்.

போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மாற்றுத்திறனாளிகளின் அடிப்படைத்தேவையாக உள்ள அனைத்து வசதிகளும் கொண்ட பராமரிப்பு நிலையம் உருவாக்க அனைவரும் இணைந்து உதவிடவேண்டும் என்ற பரப்புரையை இந்த ஆண்டு விளையாட்டு விழாவில் நாம் முன்வைக்கின்றோம்.

தமிழ் பரா விளையாட்டு விழாவானது 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 2017,2018 ஆகிய ஆண்டுகளில் வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் மிக பிரமாண்டமாக நடாத்தப்பட்டது .

அதன் தொடர்ச்சியாக 2020 ஆம் ஆண்டு விளையாட்டு போட்டிகள் நடத்துவதற்கு இருந்தன கொவிட் பரவல் காரணமாக இடையில் நிறுத்தப்பட்டு ,இப்போது மீண்டும் மட்டக்களப்பில் நடை பெறுகின்றன.

தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும் இந்த விளையாட்டு போட்டியின் முதல் அங்கமாக பார்வை இழந்தவர்களுக்கான சத்த பந்து கிரிக்கட் போட்டி இடம் பெறவுள்ளது . இந்த போட்டியில் மட்டக்களப்பை தளமாக கொண்டியங்கும் உதயம் விழிப்புலனிழந்தோர் சங்கத்தினரும்,யாழ் விழிப்புலனிழந்தோர் சங்கத்தினரும் பங்கு பற்றுகின்றனர் .

இந்த விளையாட்டு விழாவிற்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் , விளையாட்டு திணைக்களம் உட்பட பல அரச திணைக்களங்கள் உதவி புரிகின்றன. அவர்களுக்கும் எமது **DATA charity** நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

# சீமெந்து விலை மீண்டும் 200 ரூபாவால் எகிறியது!

50 கிலோ கிராம் எடையுடைய சீமெந்து பக்கெட் 200 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சீமெந்து விநியோகஸ்தர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, சீமெந்து பக்கெட் ஒன்றின் புதிய விலை 3 ஆயிரத்து 200 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு வருட காலத்துக்கு முன்னர் 50 கிலோ கிராம் சீமெந்து பக்கெட் 900 ரூபாவாக காணப்பட்டபோதிலும், இந்த ஒரு வருட காலப்பகுதிக்குள் சீமெந்து பக்கட்டின் விலை 6 சந்தர்ப்பங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருளகளின் விலையேற்றம் ஆகியன காரணமாக சீமெந்து பக்கெட்டுக்களை பல்வேறு இடங்களுக்கும் கொண்டு செல்வதில் பாரிய அசௌகரியங்களையும், போக்குவரத்து பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருவதாக சீமெந்து விநியோகஸ்தர்கள் சங்கத்தினர் குறிப்பிடுகின்றனர்.

சீமெந்து விலையேற்றம் காரணமாக வீடுகள், கட்டடங்கள் நிர்மாணத் துறையில் ஈடுபடுவோரும் தமது தொழிற்துறையில் பாரிய பின்னடைவை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் 95வீத கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன

**கொழும்பு, ஜூலை 07**

**நாட்டில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் 95 வீதமான கண்ணிவெடிகள் தற்போது அகற்றப்பட்டுள்ளன.**

**தேசிய கண்ணிவெடி செயற்பாட்டு மையம் இதுதொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.**

**இதற்கமைய 14 சதுர கிலோமீற்றர் நிலப்பகுதியில் மாத்திரமே தற்போது கண்ணிவெடி அகற்றப்பட வேண்டியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.**

**அத்துடன், 2028 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்ற அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.**

**2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.**

**இதற்காக வருடாந்தம் ஒருகோடியே 70 லட்சம் அமெரிக்க டொலர் உதவித் தொகை பெறப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.**

# இலங்கை முற்பணம் வழங்கினால் மாத்திரமே இனி இந்தியா எரிபொருள்களை வழங்குமாம்!

இலங்கை முற்பணம் செலுத்தினால் மாத்திரமே இந்தியா எரிபொருளை வழங்கத் தயாராகவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு வழங்கிய கடன்கள் முடிவடைந்துள்ள நிலையில் இலங்கைக்கு எரிபொருளை வழங்க வேண்டும் என்றால் முற்பணம் செலுத்தப்படவேண்டும் என இந்தியா தெரிவித்துள்ளதாக இந்த விடயம் தொடர்பில் அறிந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

தனது மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையிடம் எரிவாயு, எரிபொருள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கான டொலர்கள் முடிவடைந்துள்ளதால் இந்தியா எரிவாயு மற்றும் டீசலை வழங்குவதை நிறுத்தியுள்ளது, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பணத்தை வழங்கும்வரை சில கப்பல்களை அனுப்புவதை இந்தியா தாமதித்துள்ளது என தங்களை அடையாளம் காட்டவேண்டாம் எனத் தெரிவித்த இந்திய அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

முன்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதை உறுதி செய்வதற்காக இந்திய அரசாங்கத்தின் எண்ணெய் சுத்திகரிப்பு கூட்டுத்தாபனத்தின் நாலு எரிபொருள் கப்பல்கள் காத்திருக்கின்றமை அமைச்சர் காஞ்சனவிஜயசேகர வெளியிட்ட டுவிட்டர் பதிவின் மூலம் தெரியவந்துள்ளது.

அந்நிய செலாவணி கையிருப்பு முற்றாக முடிவடைந்த நிலையில் உள்ள இலங்கை எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக இந்தியாவின் புதிய கடன் உதவியை 50 கோடி டொலர் எதிர்பார்த்துள்ளது.

கட்டாரிடமிருந்து எண்ணெயைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை தனது பிரதிநிதிகளை அந்த நாட்டுக்கு அனுப்பியுள்ளது, ரஷ்யாவிடமிருந்தும் அது எண்ணெயைப் பெற முயல்கின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் இது தொடர்பாக உடனடியாகக் கருத்துத் தெரிவிக்கவில்லை.

மார்ச் முதல் ஜூன்வரையான காலப்பகுதியில் 4 லட்சத்து 50 ஆயிரம் தொன் எரிபொருள்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கியுள்ளதாக இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபன பேச்சாளர் தெரிவித்துள்ளார்.







கொடைவள்ளல் S.K.நாதன் அண்ணா அவர்களின் முயற்சியினால் அண்மையில் கிளிநொச்சி இரணைமடு குளத்தில் நன்னீர் மீன் இனங்கள் அருகி வருவதனால் நன்னீர் மீன் இனங்களை வளர்ப்பதற்காகவும் மீன் பிடியை ஊக்குவிக்கும் முகமாகவும் ஒன்றரை லட்சம் (150,000) நன்னீர் மீன் குஞ்சு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் அவர்களால் விடப்பட்டது.

தற்போது நாட்டில் நிலவுகிற பொருளாதார நெருக்கடி நிலையில் எரிபொருள் பெற்றுக்கொள்வதில் காணப் படும் இடர் காரணமாக ஆழ்கடல் மீன் பிடியில் தற்போது ஈடுபட்டுவரும் நிலை குறைந்து இரணைமடு குளத்து மீன் சந்தையில் அதிகளவில் விற்பனை செய்வதனை காணலாம் ஆகவே மீன் இனங்கள் அழிந்து விடாமல் தடுக்கும் முகமாக (150,000) நன்னீர் மீன் குஞ்சுகள் இனப் பரம்பலுக்காக குளத்தில் விடப்பட்டது இரணைமடு மீனவர் சங்கத்தினரின் வாழ்வாதாரத்திற்கு பெரும் ஊன்று கோலாக அமையக்குடியவகையில் மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சியில் கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் ஆயிரக்கணக்கான கடற்றொழிலாளர்கள் எரிபொருள் இன்மையால் தாம் வாழ்வாதாரத்தை இழந்துள்ள நிலையில் இரணைமடுக் குளத்தில் நன்னீர் மீன் வளர்ப்பை விருத்தி செய்யவும் எமது வளங்களை நாம் மேம்படுத்தக்கூடிய வகையில் தண்ணிரைவுப் பொருளாதார ஊக்குவிப்பை **S.K** நாதன் அண்ணா அவர்கள் பயனாளிகளுக்கு ஏற்படுத்தியுள்ளார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் பொறியியலாளர் ஹி. சுதாகரன் மற்றும் உத்தியோகத்தர்கள் சங்க உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.07.2022இல் வெளியிடப்பெற்றது.